பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் (நிருவாகம்) – கிழக்கு மாகாணம்
නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම් කාර්යාලය (පරිපාලන) - නැගෙනහිර පළාත
OFFICE OF THE DEPUTY CHIEF SECRETARY (ADMINISTRATION) - EASTERN PROVINCE

எனது இல. / මගේ අංකය. / My No. EP/02/Circular/2014
உமது இல. / ඔබේ අංකය. / Your No.
திகதி. / දිනය. / Date. 07.01.2014

**மாகாண பொது நிருவாக சுற்றறிக்கை இல: DCS(A)/02/2014**

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்/
பிரதி தலைமைச் செயலாளர்கள்/திணைக்களத்தலைவர்கள்/
கிழக்கு மாகாணம்.

**அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு III ல் உள்ள உத்தியோகத்தர்களின் வினைத்திறன் தடைப்பரீட்சை**

மேற்படி விடயம் தொடர்பாக அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களினால் 2013.09.23ஆம் திகதியில் வெளியிடப்பட்டுள்ள இணைந்த சேவைகள் சுற்றறிக்கை 02/2013 மற்றும் கிழக்கு மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரின் EP/07/03/Gen இலக்க 2013.12.06ஆம் திகதிய கடிதம் சார்பாக,

2) முகாமைத்தவ உதவியாளர் வகுப்பு III இல் உள்ள உத்தியோகத்தர்களுக்கு உரிய வினைத்திறன் தடைத்தாண்டல் பரீட்சை உரிய வேளையில் நடாத்தப்படாமையினால் அவ் வினைத்திறன் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைவதற்காக 04 பரீட்சை தவணைகளிற்குள் சித்தயடைவதற்கு சலுகைக் காலம் ஒன்றினை வழங்குவதற்கு குறிப்பிட்ட சுற்றறிக்கையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கு ஏற்புடையதாக கிழக்கு மாகாண முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு III இல் உள்ள உத்தியோகத்தர்களுக்கும் அச் சலுகை வழங்கக் கிழக்கு மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

3) ஆகையால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நியமனத் திகதிகளை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட சலுகையை கிழக்கு மாகாண முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு III இல் உள்ள உத்தியோகத்தர்களுக்கும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| பரீட்சைத் தவணைகள் | நியமனத் திகதி | சலுகைக் காலத்திற்காகக் கவனத்திற் கொள்ளப்படும் பரீட்சைகள் நடாத்தப்பட்ட திகதிகள் | நியமனத் திகதி | சலுகைக்காலத்திற்காகக் கவனத்திற்கொள்ளப்படும் பரீட்சைகள் நடாத்தப்பட்ட திகதிகள் |
|---|---|---|---|---|
| 01 | 2007.08.15<br>2007.12.03<br>2008.01.09 | 2008.08.30 | 2008.05.23<br>2008.07.01<br>2008.08.15<br>2009.01.01 | 2009.07.26 |
| 02 | | 2009.07.26 | | 2010.07.17 |
| 03 | | 2010.07.17 | | 2011.10.01 |
| 04 | | 2011.10.01 | | 2013.01.27 |

4) அதற்கிணங்க, மேற்படி திகதிகளில் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் 4 தவணைகளிற்குள் வினைத்திறன் தடைத்தாண்டற் பரீட்சையினை பூர்த்தி செய்திருப்பின் சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைக்கப்படமாட்டாது என்பதுடன் அப் பரீட்சையினைப் பூர்த்தி செய்யாத அலுவலர்களின் தகுதிகாண் காலமானது அவர்கள் வினைத்திறன்காண் தடையினை பூர்த்தி செய்யும் வரை நீட்டிக்கப்படும்.

5) மேலும் மேலே 04 இலுள்ளவாறு வினைத்திறன் தடைத்தாண்டல் பரீட்சையினை சித்தியடையும் அலுவலர்களினது இடைநிறுத்தப்பட்ட சம்பள ஏற்றங்களை வழங்குவதுடன், வரலாற்றுத்தாளினையும் சீர் செய்யுமாறும் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**கலாமதி பத்மராஜா,**
**பிரதிப் பிரதம செயலளார்– நிருவாகம்.**

கன்னியா வீதி, வரோதய நகர்,
திருகோணமலை.
කන්නියා පාර, වරෝදය නගර්,
ත්‍රිකුණාමලය.
Kanniya Road, Varothaya Nagar,
Trincomalee.

Gen. Office I : 026 2224049
Gen. Office II : 026 2222114
Admin Officer : 026 3269885
Deputy Chief Secretaty : 026 2222703
Assistant Chief Secretaty I : 026 3269883
Assistant Chief Secretaty II : 026 2222593
Fax : 026 2227161
Web :www.ep.gov.lk
E-mail : admin@ep.gov.lk